பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

சுடர்: 8 திருவள்ளுவர் ஆண்டு 2023 மார்கழி 28 செவ்வாய்க்கிழமை (12-01-1993) UTHAYAN—A Lively National Tamil Daily கதிர் 47

# நகரில் ஆர்ப்பாட்டப் பேரணி எழுச்சியுடன் மக்கள் கூட்டம்

## செயலகத்தின் முன் மறியல்

யாழ்ப்பாணம், ஜன. 12

ஸ்ரீலங்கா அரசின் அடக்குமுறைகளையும், தடைகளையும் கண்டித்து நேற்று யாழ். நகரில் நடைபெற்ற வெகுசன ஆர்ப்பாட்டப் பேரணியில் பல்லாயிரக் கணக்கான மக்கள் எழுச்சி பொங்க உணர்வு பூர்வமாகப் பங்குபற்றினர்.

யாழ்ப்பாணக் குடாநாட்டின் சகல பகுதிகளிலும் இருந்தும் வந்த ஆண்கள், பெண்கள், இளைஞர்கள், யுவதிகள், மாணவ மாணவியர், தொழிலாளர்கள், வர்த்தக ஊழியர்கள், தொழிற்சங்கப் பிரதிநிதிகள், ஆசிரியர்கள், அரச ஊழியர்கள், கூட்டுறவு ஊழியர் என்று சகல தரப்பினரும் நேற்றைய பேரணியில் கலந்து கொண்டனர். ஐம்பதுக்கும் மேற்பட்ட வெகுசன அமைப்புகளைச் சேர்ந்த மக்கள் பேரணியில் சென்ற

(6 ஆம் பக்கம் பார்க்க)

### நேற்றைய கோஷங்கள்

நேற்றைய ஊர்வலத்தில் கலந்து கொண்டோர் எழுப்பிய கோஷங்களில் சில வருமாறு:—

★ சர்வதேசமே போர் நிறுத்தத்திற்கு ஏற்பாடு செய்,

★ அரசியல் தீர்வென்று ஆயுதத்தை குவிக்கிறாய்!

★ விட்டுச்செல் எம் மண்ணை; எம்மண் எம்மைக் காக்கும்!

★ வாழுமிடங்களை அழித்தாய்; இப்போது வாழ்க்கையையே அழிக்கிறாய்.

★ தடைகளைப் போடப் போட தன்னாட்சி எமது கையில்!

★ உரிமைகளை அடக்க உணவு ஒரு கருவியா?,

(2 ஆம் பக்கம் பார்க்க)

## ஸ்ரீலங்கா ராணுவத்துக்கு தொடர்ந்து ஆட்சேர்ப்பு

கொழும்பு, ஜன. 12

ஸ்ரீலங்கா இராணுவத்துக்கு ஆட்சேர்க்கும் வேலைகள் தொடர்ந்து முடுக்கி விடப்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது.

படைக்கு ஆட்சேர்ப்பதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டிருப்பதாகவும்—

இதற்கான நேர் முகப் பரீட்சைகள் எதிர்வரும் வெள்ளி, சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் நடைபெறும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (உ-எ)

## அமைச்சர் பட்டாளத்துடன் பிரேமா இந்தியா விஜயம்

கொழும்பு, ஜன. 12

இந்தியாவுக்கு மூன்று நாள் விஜயம் ஒன்றை மேற்கொண்டு, எதிர்வரும் தைப் பொங்கல தினத்தன்று ஜனாதிபதி பிரேமதாஸா இந்தியா செல்லும் போது அவருடன் அமைச்சர்கள் பட்டாளம் ஒன்றும் கூடச் செல்லும் என்று தெரிவிக்கப்படுகிறது

விசேட விமானம் மூலம் ஜனாதிபதி குழுவினர் முதலில் வாரணாசி சென்றடைவர். பின்னர் அங்கிருந்து அவர்கள் புத்தகயாவுக்குச் செல்வர்.

புத்தகயாவில் பொன்வேலியையும், விதானத்தையும் திரைநீக்கம் செய்யும் வைபவத்தில் ஜனாதிபதி பிரேமதாஸா பங்குபற்றுவார்.

சார்க் மாநாட்டில் பங்குபற்றுவதற்காக பங்களாதேஷ் தலைநகர் டாக்காவுக்கு சென்றுவிட்டுத் திரும்பும் வழியில் இந்தியாவுக்கு விஜயம் செய்வது என ஜனாதிபதி பிரேமதாஸா முதலில் திட்டமிட்டிருந்தார்.

ஆனால் சார்க் மாநாடு திடீரென ஒத்திவைக்கப்பட்டது. எனினும் ஜனாதிபதி பிரேமதாஸா திட்டமிட்டபடி தமது இந்திய விஜயத்தை மேற் கொள்வார் என அறிவிக்கப்பட்டிருக்கிறது. (உ-எ)

## இந்தியப் பிரதமரின் செய்தி ஜனாதிபதியிடம் கையளிப்பு

கொழும்பு, ஜன. 12

இந்திய வெளியுறவு இணை அமைச்சர் எட்வர்டோ பெலறோ நேற்று கொழும்பில் ஜனாதிபதி பிரேமதாஸாவைச் சந்தித்து, அவரிடம் பிரதமர் பி. வி. நரசிம்மராவின் விசேட செய்தி ஒன்றைக் கையளித்தார்.

சார்க் உச்சிமாநாட்டை மீண்டும் ஒத்திப்போடும் படி இந்தியா கேட்டுக் கொண்டதற்கான காரணங்களை திரு. பெலறோ, ஜனாதிபதியிடம் விளக்கினார்.

'சார்க்' அமைப்பின் தற்போதைய தலைவர் திரு. பிரேமதாஸா என்ற முறையில் இந்தியப் பிரதிநிதி தமது தரப்பு விளக்கத்தை அவருக்கு நேரில் விளக்கிக் கூறினார். [உ-எ]

## 55 நாடுகளுக்கு மகஜரின் பிரதிகள்

யாழ்ப்பாணம், ஜன 12

நேற்றைய பேரணியின் முடிவில் ஐக்கிய நாடுகள் சபைக்கு அனுப்பப்பட்ட மகஜரின் பிரதிகள் கொழும்பில் உள்ள 55 வெளிநாட்டுத் தூதரகங்களுக்கும் அனுப்பி வைக்கப்படும்.

தமிழீழ வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியத் தலைவர் திரு. சூ. சிறில் இத் தகவலைத் தெரிவித்தார். (அ-5)

## இயல்பு வாழ்க்கை நேற்று பாதிப்பு

யாழ்ப்பாணம், ஜன. 12

நகரில் நடைபெற்ற வெகுஜனப் பேரணியால் நேற்று யாழ். செயலகம் இயங்கவில்லை.

நேற்றுக் காலையே யாழ். செயலக பிரதான வாயில் கதவுகள் மூடப்பட்டு அதில் பதாகைகளும், சுலோக அட்டைகளும் கட்டப்பட்டிருந்தன.

நேற்றுக் காலை கடமைக்கு வந்த செயலக ஊழியர்கள் உள்ளே செல்ல முடியாமல் திரும்பினர். பின்னர் பேரணி யாழ். செயலகத்தை வந்தடைந்த சமயம் அருகில் உள்ள வை. எம் சி. ஏ மண்டபத்தில் தங்கி நின்ற செயலக

[2 ஆம் பக்கம் பார்க்க]

### முச்சந்தி முரளி



பட்டாளத்தை விட்டுட்டுப் போகப் பயப்பிடுறார் போலை.....

## கிளாலி படகு சேவை மீண்டும் ஆரம்பம்

கிளாலிப் படகுச் சேவை நேற்று முன்தினம் இரவு சுமுகமாக நடைபெற்றதைஅடுத்து ஆலங்கேணி, நல்லூர், பரந்தன், கிளிநொச்சிப் பகுதிகளில் காத்திருந்த பல நூற்றுக்கணக்கான மக்கள் நேற்றுக் காலை யாழ்ப்பாணத்தை வந்தடைந்தனர்.

கடந்த பத்து நாட்களுக்கு மேல் கிளாலி சேவை தடைப்பட்டிருந்ததால், ஆலங்கேணிக் கரையில் நிர்க்கதி நிலையில்

[6 ஆ பக்கம் பார்க்க]

## அம்பாறைத் தாக்குதலில் 12 போராளிகள் வீரச்சாவு

### ஆறு படையினர் பலி; ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டன

யாழ்ப்பாணம், ஜன. 12

மட்டக்களப்பு மாவட்டம் கொஸ்வலையில் இராணுவத்தினருக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நேற்று முன்தினம் காலை இடம்பெற்ற திடீர் மோதல் சம்பவத்தில் 6 படையினர் கொல்லப்பட்டனர். விடுதலைப் புலிகள் தரப்பில் 12 போராளிகள் வீரச்சாவடைந்தனர்.

கொஸ்வலை முகாமில் இருந்து தம்பாட்டி முகாமுக்கு இராணுவத்தினர் ரோந்து வந்த சமயம் விடுதலைப் புலிகளுடன் மோதல் மூண்டது.

சுமார் 15 நிமிட நேரம் நீடித்த இம்மோதலில் ஆறு இராணுவத்தினர் கொல்லப்பட ஏனையோர் முகாமுக்குப் பின்வாங்கிச் சென்றனர்.

இத்தாக்குதலின் போது—

★ ரி - 56 துப்பாக்கி — 05

★ ஏ. கே மகஸின் — 04

★ நடுத்தர ரவைகள் — 45

★ புகைக் குண்டு — 01

ஆகியவை உட்பட பல இராணுவ தளபாடங்களும் விடுதலைப் புலிகளால் கைப்

[6 ஆம் பக்கம் பார்க்க]

## கைதிகள் பரிமாற்றத்துக்கு விடுதலைப் புலிகள் தயார்!

### கலாநிதி அன்ரன் பாலசிங்கம் அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஜன. 12

''நல்லெண்ண அடிப்படையில் இரு கைதிகளை இன்று நாம் விடுதலை செய்கிறோம்.

வசதிகள் அற்ற நிலையில் — பல சிறை மற்றும் தடுப்பு முகாம்களில் — தடுத்து வைக்கப்பட்டுள்ள ஆயிரத்துக்கு மேற்பட்ட எமது ஆதரவாளர்களை, கைதிகள் பரிமாற்ற அடிப்படையில் ஸ்ரீலங்கா அரசு விடுதலை செய்தால் நாம் தடுத்து வைத்துள்ள ஏனைய கைதிகளையும் விடுதலை செய்யத் தயாராக உள்ளோம். அங்கிலிக்கன் ஆயர் மூலமாக ஸ்ரீலங்கா அரசுக்கு இந்தச் செய்தியை அனுப்புகிறோம்''

— இப்படிக் கூறினார் விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம்

புலிகளின் தடுப்புக் காவலில் இருந்த இரு சிறைக் கைதிகளை, அங்கிலிக்கன் ஆயர் அதி. வண கென்னத் பெர்னாண்டோவிடம் கையளிக்கும் வைபவம் நேற்று மாலை யாழ் நகரில் நடைபெற்றது.

[6 ஆம் பக்கம் பார்க்க]

### புலிகளால விடுவிக்கப்பட்ட இரு பொலீஸாரையும் ஆயர் பொறுப்பேற்றார்

யாழ்ப்பாணம், ஜன. 12

விடுதலைப் புலிகளினால் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் ஸ்ரீலங்காப் பொலீஸார் 40 பேரில் இருவர் நேற்று மாலை விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட அரசியல் நிர்வாசப் பொறுப்பாளர் திரு. இளம்பரிதியினால் அங்கிலிக்கன் திருச்சபையின் ஆயர் அதி. வண. கென்னத் பெர்னாண்டோவிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

விடுதலைப் புலிகளால் 39 பொலீஸாரும் ஒரு ராணுவச் சிப்பாயும் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களில் ஒட்டு சுட்டான் பொலீஸ் நிலையத்தில் வைத்து புலிகளால் கைது செய்யப்பட்ட சார்ஜன்ட் ஏ. எம். எல். பண்டார (44 வயது - கண்டி), அதே நிலையத்தில் சாரதியாகக் கடமையாற்றிய எட்வேர்ட் பெரேரா

(6ஆம் பக்கம் பார்க்க)

## பிரபாவினுடனான சந்திப்பு; ஸ்ரீலங்கா அரசுக்கு அறிக்கை

### ஆயர் சமர்ப்பிப்பார்

யாழ்ப்பாணம், ஜன. 12

''விடுதலைப் புலிகள் தலைவர் திரு வே. பிரபாகரனுடன் நடத்திய பேச்சுக்களின் விவரங்கள் அடங்கிய அறிக்கையை கொழும்பு சென்றதும் ஜனாதிபதியிடம் கையளிப்போம்''

அங்கிலிக்கன் திருச்சபையின் ஆயர் அதி வண. கென்னத் பெர்னாண்டோ இவ்வாறு தெரிவித்தார்.

விடுதலைப் புலிகளின் பாதுகாப்பில் இருந்த இரு சிங்களப் பொலீஸாரை விடுவிக்கும் வைபவம் நேற்று நடைபெற்ற போது அங்கு உரையாற்றுகையில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

''நான் திரு. பிரபாகரனைச் சந்தித்துப் பேசிய போது,'' நல்லெண்ண அடிப்படையில் உங்கள் காவலில் உள்ள இரு கைதிகளை விடு

(6ஆம் பக்கம் பார்க்க)

## புலிகள் எங்களை நன்கு உபசரித்தனர்

### விடுதலையான சார்ஜன்ட் தகவல்

யாழ்ப்பாணம், ஜன. 12

''விடுதலைப்புலிகள் எம்மை எந்தவித துன்புறுத்தலுக்கும் உள்ளாக்காமல் நன்கு உபசரித்தார்கள். உணவு வசதிகள் மட்டுமல்லாது எமக்கு வைத்திய வசதி போன்ற ஏனைய உதவிகளையும் குறைவின்றி வழங்கினார்கள்.

நாம் தென்னிலங்கை திரும்பியதும் புலிகளின் உபசாரத்தையும், அவர்களின் காருண்யப் போக்கையும் அங்குள்ளோருக்குத் தெரிவிப்போம்''

இப்படிக் கூறினார் நேற்று விடுதலையான பொலீஸ் சார்ஜன்ட் பண்டார.

விடுதலையான பின்னர் அவர் கருத்து வெளியிடுகை

(6 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சடலத்தை கையளிக்கவும் நேரகாலம் தேவைதானா?

## பாதிப்புற்ற மக்கள் கேள்வி

யாழ்ப்பாணம், ஜன. 11

யாழ். ஆஸ்பத்திரியில் இருந்து சடலங்களை எடுத்துச் செல்வதானால் குறிப்பிட்ட நேரத்திற்குச் செல்ல வேண்டும்.

நேரம் பிந்தினால் — அதாவது மாலை 6 மணிக்குப் பின்னர் சென்றால் — "இன்று போய் நாளை வா" என்ற பதிலே கிடைக்கும்!!

யாழ். ஆஸ்பத்திரியின் இந்தப் புதிய நடைமுறையினால் தூர இடங்களில் இருந்து வருபவர்கள் தமது உறவினர்களின் சடலங்களை வீட்டுக்கு எடுத்துச் செல்வதில் பெரும் சிரமங்களை எதிர் நோக்குகின்றனர்.

தற்பொழுது காலை 6 மணி தொடக்கம் மாலை 6 மணி வரை மட்டுமே சடலங்கள் உரியவர்களிடம் கையளிக்கும் வேலைகள் நடைபெறுகின்றன என்று தெரிவிக்கப்பட்டது.

மாலை 6 மணிக்குப் பின்னர் — அதாவது இரவில் சடலங்களைக் கையளிக்க ஆஸ்பத்திரி அதிகாரிகள் மறுத்து வருகின்றனர் என்று கூறப்படுகிறது. இந்த நேர மாற்ற நிலைமையினால் — போர்க் காலச் சூழலில் — மக்கள் தேவையற்ற சிரமங்களையும் கஷ்டங்களையும் சந்திக்க நேரிடுகிறது.

கடந்த 3 ஆம் திகதி இரவு ஆஸ்பத்திரி பிரேத அறையில் இருந்து ஒருவரின் சடலத்தை அவர்களது உறவினர்கள் தவறுதலாக — ஆள் மாறி — எடுத்துச் சென்று ஈமக் கிரியைகளையும் முடித்துவிட்ட சம்பவத்தைத் தொடர்ந்தே தற்போது "புதிய நேர நடைமுறை" கடைப்பிடிக்கப்படுவதாகத் தெரியவந்தது.

இதேவேளை —

யாழ் ஆஸ்பத்திரிச் சவச் சாலையில் குளிரூட்டி வசதிகள் சரிவர இயங்காததால் "எம்பாம்" செய்யாமல் சவச் சாலையில் வைக்கப்படும் சடலங்கள் — அங்கு ஏற்கனவே பழுதடைந்த சடலங்களுக்கு நெருக்கமாக இருப்பதால் — விரைவில் உருக்குலைந்து போவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

(உ ஒ-15)

# திகதி இன்னும் முடிவில்லை

கொழும்பு, ஜன 12

கொழும்பில் உள்ள கூட்டுப் படைகள் தலைமையகத்தை அனுராதபுரத்துக்கு மாற்றும் திகதி இன்னும் நிர்ணயிக்கப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

அனுராதபுரத்தில் தற்போதுள்ள — இராணுவ இரண்டாம் பிரிவின் தலைமையகம் — வவுனியாவுக்கு இடம் மாற்றம் செய்யப்பட்ட பின்னரே, கூட்டுப்படைத் தலைமையகம் அனுராதபுரத்துக்கு மாற்றப்படும் என்று சிரேஷ்ட இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (உ-எ)

# சிறுமியை அறையினுள் பூட்டி சித்திரவதை செய்த ஆசிரியை

## பொலீஸாரால் கைது

சிறுமி ஒருவரைச் சித்திரவதை செய்ததாகக் கூறப்படும் ஆசிரியை ஒருவரை கொழும்பில் பொலீஸார் கைது செய்தனர்.

12 வயதான இச்சிறுமியை ஒன்றரை ஆண்டுகளாக அறை ஒன்றினுள் பூட்டி வைத்துச் சித்திரவதை செய்தாராம் இந்த ஆசிரியை.

இந்த ஆசிரியை பிரபல கல்லூரி ஒன்றில் பணியாற்றிய பின்னர் ஓய்வு பெற்றிருந்தார். இவரைக் கடவத்த பொலீஸார் கடந்த ஞாயிறு கைது செய்தனர். சம்பந்தப்பட்ட சிறுமி மூச்சு பேச்சற்ற நிலையில் ராகம ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார்.

ஆசிரியையின் வீட்டில் திருத்த வேலைகளை மேற்கொள்ளச் சென்ற சிலர் கொடுத்த தகவலைத் தொடர்ந்தே பொலீஸார் இந்த நடவடிக்கையை எடுத்தனர். (த-எ)

# அத்வானி, ஜோஷி குழுவினர் ஞாயிறு விடுதலையாகினர்

புதுடில்லி, ஜன. 12

அயோத்தி விவகாரம் தொடர்பாக கைது செய்யப்பட்ட பாரதிய ஜனதாக் கட்சித் தலைவர்களான எல். கே. அத்வானி, டாக்டர் முரளி மனோகர் ஜோஷி மற்றும் விஷ்வ இந்து பரிஷத் தலைவர்கள் அனைவரையும் இந்திய அரசு நேற்று முன்தினம் விடுதலை செய்தது.

இதேவேளை —

தடை செய்யப்பட்டுள்ள மூன்று இந்துமத அடிப்படைவாத அமைப்புகளும், இரண்டு இஸ்லாமிய தீவிரவாத அமைப்புகளும் வேறு பெயர்களுடன் செயல்பட ஆரம்பித்தால் அப்புதிய அமைப்புகளையும் மத்திய அரசு தடை செய்யும்.

இந்திய மத்திய உள்துறை அமைச்சர் எஸ் பி. சவான் இத்தகவலை வெளியிட்டார்.


## கண்ணீர் அஞ்சலி

முன்னர் பலாலி ஆசிரிய கலாசாலையின் விரிவுரையாளராயும், பின்னர் கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் அதிபராயும் அரும்பணியாற்றிய எமது அன்புக்கும் மதிப்புக்கும் உரியவராயிருந்து இயற்கை எய்திய

திருமதி

ரதிலக்ஷ்மி ஆனந்தகுமாரசாமி

அம்மையாருக்கு

அன்புக்கடனாகக் கண்ணீர் அஞ்சலி செலுத்தி வணங்குகின்றோம்.

பலாலி ஆசிரிய கலாசாலை அதிபர்,
விரிவுரையாளர்கள்,
ஆசிரிய மாணவர்கள்.

திருநெல்வேலி,
09 - 01 - 1993

(24033)


# இன்று

யாழ்ப்பாணம், ஜன 12

யாழ். விஜயம் செய்துள்ள அங்கிலிக்கன் திருச்சபை ஆயர் அதிவண கெனத் பெர்னான்டோ இன்று முற்பகல் 10.30 மணிக்கு யாழ் மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத்துக்கு விஜயம் செய்து இணையப் பிரதிநிதிகளைச் சந்திப்பார்.

இச்சந்திப்பின் போது யாழ். மாவட்டத்தின் நிலைமைகள் தொடர்பான விரிவான அறிக்கை ஒன்று ஆயரிடம் கையளிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

(உ-5)

o o o

யாழ்ப்பாணம், ஜன. 12

உரும்பராய் சுபிட்ச நூலகத்தில் இன்று செவ்வாய்க்கிழமை மாலை 4 மணிக்கு சுவாமி விவேகானந்தர் தேசிய தின நிகழ்ச்சிகள் இடம்பெறும்.

(உ-க)

o o o

யாழ்ப்பாணம், ஜன. 12

ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் முன்னாள் முகாமையாளர் அமரர் டாக்டர் சி சுப்பிரமணியம் அவர்களின் நினைவுச் சொற்பொழிவுக் கூட்டம் இன்று காலை 8.45 மணிக்கு ஸ்கந்தவரோதயக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்.

ஸ்கந்தவரோதயக் கல்லூரி அதிபர் திரு. ப. விக்கினேஸ்வரன் தலைமையில் நடைபெறும் இக் கூட்டத்தில் வைத்தீஸ்வராக் கல்லூரி அதிபர் திரு. சி. சரவணபவன் நினைவுரை ஆற்றுவார். (க)

# நாளை

யாழ்ப்பாணம், ஜன. 12

"இன உணர்வுக் கவிதைகளும் தமிழீழ விடுதலைப் போராட்டமும் — காசி ஆனந்தன், புதுவை இரத்தினதுரை கவிதைகள் பற்றிய ஆய்வு" என்ற தலைப்பிலான கருத்தரங்கு ஒன்று நாளை பிற்பகல் 2-30 மணிக்கு யாழ் பல்கலைக்கழக அரும்பொருளக அறையில் நடைபெறும்.

யாழ். பல்கலைக்கழக தமிழ்த்துறையின் ஏற்பாட்டில் நடைபெறும் இக்கருத்தரங்கில் தமிழ்த்துறை உதவி விரிவுரையாளர் செல்வி க. சந்திரா கருத்துரை வழங்குவார்.

# மா இறக்கும் வேலை பாதிப்பு

பருத்தித்துறை துறைமுகத்தில் தரித்து நிற்கும் "குமண" கப்பலில் இருந்து மா மூடைகளை இறக்கும் வேலைகள் நேற்று பாதிக்கப்பட்டன.

மா இறக்கும் பணியில் ஈடுபட்டிருக்கும் தொழிலாளர்கள், யாழ் நகரில் நடைபெற்ற ஆர்ப்பாட்டப் பேரணியை ஒட்டி நேற்று தமது வேலைக்குச் செல்லவில்லை என்றும் —

இதனால் கப்பலில் இருந்து மா மூடைகளை இறக்கும் வேலை பாதிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

(உ-17- 09)

# மட்டுநகரில் ஜூனில் தேர்தல்

மட்டக்களப்பு மாநகர சபைக்கான தேர்தல் எதிர்வரும் ஜூனில் நடைபெறும் என எதிர்பார்க்கப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

# நினைவுச் சொற்பொழிவு

நேற்றைய உதயன் இரண்டாம் பக்கத்தில் வெளியான நினைவுச் சொற்பொழிவு என்ற விளம்பரத்தில் —

ஸ்கந்தவரோதயாக் கல்லூரியின் முன்னாள் முகாமையாளர் அமரர் டாக்டர் சி. சுப்பிரமணியம் என்பதற்குப் பதிலாக —

அமரர் டாக்டர் சிவசுப்பிரமணியம் என்று தவறுதலாக அச்சாகியுள்ளது. திருத்தி வாசிக்கவும்.

# தன் ஏவுகணைகளை ஈராக் அகற்றியது!

ஈராக்கின் தென் பகுதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த ஏவுகணைகளை ஈராக் அகற்றி விட்டதாக அறிவிக்கப்படுகிறது. அல்சாரா விமானத் தளத்தில் இருந்த ஈராக்கிய ஜெட் விமானங்களும் அங்கிருந்து அகற்றப்பட்டு விட்டன.

அமெரிக்கப் பாதுகாப்பு அமைச்சின் உயரதிகாரி ஒருவர் இத்தகவல்களைத் தெரிவித்தார்.

தெளிவாக எதையும் பார்க்க முடியாமல் இருப்பதால் விமான எதிர்ப்பு ஏவுகணைகள் எங்கு கொண்டு செல்லப்படுகின்றன என்பது தெரியவில்லை என்றும் அவர் சொன்னார்.

ஏவுகணைகளை அகற்றுவதற்கான காலஎல்லை முடிவடைந்தது ஈராக் ஏவுகணைகளை அகற்றத் தொடங்கி விட்டதாக தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை —

ஐ. நாவின் விமானம் ஒன்று பக்தாத்தில் தரையிறங்க அனுமதி மறுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (த)

# பயிலுநர் ஆசிரியருக்கு பாடசாலைகள் ஒதுக்கீடு

யாழ்ப்பாணம், ஜன. 12

கோட்டகலையில் பயிற்சியை முடித்துத் திரும்பிய — யாழ் மாவட்டத்தைச் சேர்ந்த — பட்டதாரிப் பயிலுநர் ஆசிரியர்களுக்குப் பாடசாலைகளை ஒதுக்கி வழங்கும் கடிதங்கள் யாழ் கல்வி அலுவலகத்தில் சனியன்று வழங்கப்பட்டன. சுமார் நூற்றைம்பது பேர் தமது கடிதங்களைப் பெற்றுக் கொண்டனர்.

இதேவேளை —

கோட்டகலையில் நடைபெற்ற பயிற்சியில் கலந்து கொள்ள முடியாமற் போனவர்களுக்கு நியமனம் வழங்குவது பற்றி கல்வி அமைச்சுக்கு தகவல் அனுப்பப்பட்டிருப்பதாகவும், பதில் கிடைத்த பின்னரே அவர்களுக்குப் பாடசாலைகளை ஒதுக்குவது குறித்து முடிவு எடுக்கப்படும் என்றும் கல்வி அலுவலக வட்டாரங்கள் தெரிவித்தன. (அ 5)

# தொழிற்பயிற்சி வழங்கும் நடவடிக்கைகள் ஆரம்பம்

அராலி, ஜன: 12

யாழ். மாவட்டத்தில் தொழிற்பயிற்சி வழங்கும் நடவடிக்கையை தேசிய தொழிற்பயிற்சி சபை மீண்டும் ஆரம்பித்துள்ளது.

இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ் கிளையின் அனுசரணையுடன் இம்மாத ஆரம்பத்தில் இருந்து இது நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

செஞ்சிலுவைச் சங்க யாழ் கிளை தனது பிரிவு அலுவலகங்களினூடாக பயிலுநர்களைப் பயிற்சிக்காகத் தெரிவு செய்யும். எழுதுவினைஞர், தாதிகள், புகைப்படக்கலை, நீர் இறைக்கும் இயந்திரம் பழுது பார்த்தல், மிதிவண்டி பழுது பார்த்தல் போன்ற பல பயிற்சி நெறிகள் ஒரு வருடத்திற்கு வழங்கப்படும்.

(த 12)

# மந்திகை ஆஸ்பத்திரியில் மருந்துக்குத் தட்டுப்பாடு

மந்திகை, ஜன. 12

மந்திகை அரசினர் ஆதார வைத்தியசாலையில் சகல விதமான மருந்து வகைகளுக்கும் பெரும் தட்டுப்பாடு நிலவுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

குறிப்பாக பனடோல், அம்பிசிலின், பிறிற்றோன், தொற்று நீக்கிகள் போன்றவற்றிற்கு தட்டுப்பாடு நிலவுகின்றது.

இதன் காரணமாக வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சை பெறுவோரும், விடுதிகளில் தங்கியிருந்து சிகிச்சை பெறுவோரும் தமக்குத் தேவையான மருந்து வகைகளை தனியார் மருந்து விற்பனை நிலையங்களிலேயே வாங்க வேண்டி இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

## தொல்புரம் பகுதியில்

# மிளகாய் நாற்றுகளுக்கு தட்டுப்பாடு நிலவுகிறது

அராலி, ஜன 12

தொல்புரம் கமநல சேவைப் பிரிவில் மிளகாய் நாற்றுக்குப் பெரும் தட்டுப்பாடு நிலவி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதனைத் தொடர்ந்து இப் பகுதிகளில் மிளகாய்ச் செய்கையைக் கைவிட்டு விவசாயிகள் வேறு பயிர்ச்செய்கைகளில் ஆர்வம் காட்டி வருகின்றனர். இதன் காரணமாக ஏனைய மரக்கறி நாற்றுக்களும் நாட்டப்படவில்லை.

இப் பகுதியில் நெற்செய்கைக்கு அடுத்தபடியாக மிளகாய்ச் செய்கை கடந்த காலங்களில் முக்கிய இடம் வகித்து வந்தமை குறிப்பிடத்தக்கது.

(த-12)

# ஆன்மீக விளையாட்டுகள் ஆழ்ந்த தத்துவம் மிக்கன

## திருவாசகப் பெருவிழாவில் உரை

யாழ்ப்பாணம், ஜன 2

"பெண்களை லமபமாகக் கொண்டு அருளிச் செய்யப்பட்ட திருவாசகத்தில் அரிவையர், இறைச்சிவைய ஆன்மீக விளையாட்டுகள் ஊடாக உலகிற்குத் தெரிவிக்கின்றனர். ஆன்மீக சிந்தனைகளை வெளிப்படுத்தும் அம்மானை, திருப்பூவல்லி, திருச்சாழல் உந்திபற போன்ற விளையாட்டுகள் ஆழமான தத்துவங்களைக் கூறுவன."

வண்ணை வைத்தீஸ்வரர் ஆலயத் திருவாசகப் பெருவிழாவின் மூன்றாம் நாள் நிகழ்ச்சியில் சிறப்புரை நிகழ்த்திய திருமதி மங்கையர்க்கரசி சிற்றம்பலம் இவ்வாறு கூறினார்.

வேம்படி மகளிர் கல்லூரி அதிபர் செல்வி இ. இராசரத்தினம் தலைமையில் நடைபெற்ற பெருவிழாவில் 'அரிவையரின் ஆன்மீக விளையாட்டுகள்' என்ற தலைப்பில் உரையாற்றிய அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது;

"திருவெம்பாவை மெய்யடியார்களைச் சேர்ந்து நீராடித் தொழும் சீர்மையை உணர்த்துகிறது. 'திருவம்மானை' விளையாடும் பொழுதுகூட சிவன் திருவடியைப் பாடியே விளையாட வேண்டும் என்பதை உணர்த்துகிறது" — என்று கூறினார்.

செல்வி இராசரத்தினம் தமது தலைமை உரையில்;

"மணிவாசகர் திருவாசகத்தில் உலகியல் வாழ்வில் பெண்மையின் முக்கியத்துவத்தை எடுத்துக் காட்டினார். பெண்கள் தமது குழந்தைகளை நற்பண்பு உடையவர்களாக வளர்க்க வேண்டும்" என்று கூறினார்.

(க-111)

# இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம், ஜன. 12

ஹற்றன் நஷனல் வங்கி யாழ். மாவட்ட கழக அணிகளுக்கிடையில், யாழ் பல்கலைக் கழக ஆடுகளத்தில் நடத்தி வரும் கடைப்பந்தாட்ட போட்டித் தொடரில் இன்று நடைபெறும் ஆட்டங்கள் வருமாறு:-

★ பிற்பகல் 3.30 மணி:- யாழ் பல்கலைக் கழக அணி எதிர் சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழக அணி

★ பற்றிஷியன்ஸ் விளையாட்டுக் கழக அணி எதிர் யாழ் பல்கலைக் கழக அலுவலர் அணி.

★ ★ ★

யாழ். மிட்ரவுன் றோட்றக்ட் கழகம் நடத்து வரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று மாலை 4 மணிக்கு சென். நிக்கலஸ் அணியை எதிர்த்து சென். றோக்ஸ் அணி மோதும். இந்த ஆட்டம் சென். பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெறும்.

(உ)

# ஒத்திவைப்பு

நல்லூர் லயன்ஸ் கழகத்தின் ஏற்பாட்டில் இன்று செங்குந்த இந்துக் கல்லூரியில் நடைபெறவிருந்த எய்ட்ஸ் பற்றிய கருத்தரங்கு தவிர்க்க முடியாத காரணங்களினால் ஒத்திவைக்கப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (க)

## இயல்பு...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அதிகாரிகள் சிலர் அங்கிருந்து வந்தனர்.

பேரணியினால் போக்குவரத்து சேவைகள் நடைபெறவில்லை. வர்த்தக நிலையங்கள் மூடப்பட்டிருந்தன. நகரம் வெறிச்சோடிக் கிடந்தது. இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டிருந்தது.

(அ-5 1,1-17)

## நேற்றைய ..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

★ ஆயுதத்தினால் செய்ய முடியாததை அரிசியினால் செய்ய முடியாது.

★ சிறிலங்கா அரசே அர்த்தமற்ற யுத்தத்தை நிறுத்து!

★ எறிகணை ஏவினாய்; குண்டுமாரி பொழிந்தாய்; நாம் ஓய்ந்தோமா? தலை சாய்ந்தோமா

★ உரிமைகளை அடக்க உனக்கு உணவு ஒரு கருவியா?

★ பேசுவதோ பௌத்த தர்மம்! போடுவதோ பட்டினி,

★ தபால்களை தடை செய்யாதே,

★ பூநகரி பாதையைத் திற

★ கிளாலிப் படுகொலைகளை மன்னிக்க நாம் தயாரில்லை,

★ அன்று பொருளாதாரத் தடை; எரிபொருள் தடை; மருந்துத் தடை; இன்று வாழ்த் தடை.

★ உழைக்கும் வழிகளை தடை செய்தால் பிழைக்கும் வழிகளை நாம் காண்போம்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# சமஷ்டியை முதல் அறிமுகம் செய்தவர் துட்டகைமுனுவே

## காமினி பொன்சேகா சொல்கிறார்

கொழும்பு, ஜன. 12

இந்த நாட்டில் சமஷ்டி ஆட்சி முறையை முதன் முதலாக துட்டகைமுனு மன்னன்தான் அறிமுகஞ் செய்து வைத்தான். இதை பௌத்த குருமாரும் சமஷ்டி முறைக்கு எதிர்ப்புத் தெரிவிப்போரும் ஏன் மறந்துவிட்டனர்?

உப சபாநாயகர் காமினி பொன்சேகா மாத்தறையில் நடந்த பொதுக் கூட்டம் ஒன்றில் பேசுகையில் முன்கண்டவாறு குறிப்பிட்டார்.

சரித்திரத்தை எவரும் மறந்து விட, மறைத்துவிட முடியாது. சமஷ்டி என்ற வார்த்தையைக் கேட்டதும் எல்லோரும் அலறி அடித்துக் கொள்கின்றார்கள். ஏதோ நடக்கக் கூடாதது நடந்துவிட்டது என்று நினைக்கிறார்கள். சமஷ்டி முறையை பௌத்த குருமாரையும் ஏற்றுக் கொள்ளச் செய்வதற்கு சிறந்த வழி என்ன?

சமஷ்டி முறை என்ற வார்த்தைக்குப் பதிலாக அதனை துட்டகைமுனுமுறை என்று நாம் அழைப்போம். அப்படி அழைப்பின் அதனை பௌத்த குருமார்களும் ஏற்றுக் கொள்வார்கள் அல்லவா!

இவ்வாறு காமினி பொன்சேகா மேலும் தெரிவித்தார். (த-எ)

## கொழும்பில் கைதாம்!

கொழும்பு, ஜன 12

விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர்களில் ஒருவரை கோட்டை ரயில் நிலையத்தில் வைத்துப் பொலிஸார் கைது செய்தனர் என்று கொழும்புப் பத்திரிகைச் செய்திகள் தெரிவித்தன.

இவர் வவுனியா செல்ல ரயில் நிலையத்துக்கு வந்த சமயமே புறகோட்டைப் பொலிஸார் அவரைக் கைது செய்தனர் என்று தெரிவிக்கப் பட்டது. (த-எ)

## அதிரடிப்படையில் பெண்கள் பிரிவு

கொழும்பு, ஜன 12

விசேட அதிரடிப் பொலிஸ் படையில் பெண்கள் பிரிவு ஒன்றும் உருவாக்கப்பட்டுள்ளது.

இந்தப் படையின் நடவடிக்கைகளை மேலும் விஸ்தரிக்கவும் பரவலாக்கவும், இந்தப் பெண்கள் அணியை [illegible] மதிப்பதன் மூலம் சாத்தியமாகும் என்று தெரிவிக்கப்படுகிறது. (த-எ)

## ஆஸ்பத்திரியை இயங்க வைக்க கோரிக்கை

அண்மையில் வலி-மேற்கில் இடம்பெற்ற ராணுவ நடவடிக்கைகளைத் தொடர்ந்து தற்போது ராணுவக் கட்டுப்பாட்டு பகுதியில் உள்ள பண்டத்தரிப்பு கிராமிய வைத்தியசாலையை வேறு இடத்தில் இயங்க வைக்க நடவடிக்கை எடுக்கும்படி பண்டத்தரிப்புப் பகுதியைச் சேர்ந்த பல பொது அமைப்புகள் பிராந்திய சுகாதாரப் பணிப்பாளரிடம் கோரிக்கை விடுத்துள்ளன. (த)

## மட்டக்களப்பில் மேலும் ஒரு பொலிஸ் பிரிவு

மட்டக்களப்பு மாவட்டத்தில் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காக மேலும் ஒரு உதவிப் பொலிஸ் பிரிவு இம்மாதம் முதல் ஏற்படுத்தப்பட்டுள்ளது. (த-எ)

## நெற்பயிர்கள் கருகி நாசம்

காலபோக மழை இல்லாத காரணத்தால் வட்டுக்கோட்டை மற்றும் வல்லை வெளிப்பகுதிகளில் நெற்பயிர்கள் கருகி நெல்மணிகள் சப்பியாகின்றன.

மண்ணெண்ணெயின் விலை மிகவும் கூடுதலாக இருப்பதால் விவசாயிகள் வயல்களுக்கு நீர்பாய்ச்ச முடியாதவர்களாகவும் இருக்கின்றார்கள். (க-ரி-155)

## அன்பளிப்பு

தைப்பூசத்தினத்தன்று வித்தியாரம்பம் செய்து வைக்க அரிச்சுவடி ஏடு தேவையானோர் மில்க்வைற் அலுவலகத்தில் அன்பளிப்பாக பெற்றுக் கொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ

## பாடசாலை நாட்கள்

1993ஆம் ஆண்டில் குறைந்தபட்சம் 190 நாட்களாவது பாடசாலை நடத்தப்பட வேண்டும் என்று, கல்வி அமைச்சின் பாடசாலை அபிவிருத்திப் பிரிவினால் சகல பாடசாலை அதிபர்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது.

---


இரண்டாவது

பிறந்தநாள் வாழ்த்து



★ நக்கீரன் கவிவர்ணன் ★

கலையகம், கலைநகர் சித்தன்கேணியைச் சேர்ந்தவரும் தற்போது ஆஸ்திரேலியாவில் வசிப்பவருமாகிய தம்பையா நக்கீரன் - ஆனந்த ரூபி தம்பதிகளின் செல்வப் புதல்வன்

★ கவிவர்ணன் ★

இன்று (12-01-1993) செவ்வாய்க்கிழமை தனது இரண்டாவது பிறந்ததினத்தை வெகுவிமரிசையாக ஆஸ்திரேலியாவில் கொண்டாடுகின்றார்.

இவரை அப்பா, அம்மா, அப்பப்பா, அப்பம்மா, ஆஸ்திரேலியாவில் இருக்கும் அம்மப்பா, அம்மம்மா, பெரியப்பா, பெரியம்மா, கீர்த்தா அக்கா, கனடாவில் இருக்கும் பெரிய மாமா, பெரிய மாமி, லண்டனில் இருக்கும் சித்தப்பா, சின்னமாமா, பெரிய அத்தை, பெரியமாமா, பிரான்ஸில் இருக்கும் சின்னத்தை, சின்னமாமா, மைத்துனி - கீர்த்திகா, குட்டி அத்தை, சிவா, உறவினர்கள், நண்பர்கள், அனைவரும் பல்கலையும் கற்று, பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகிறார்கள்.

வி. ரி. கதிர்காமநாதன்,
(பெரியப்பா).

(24030)



2 ஆவது சிராத்த தினம்

தோற்றம்: 09 — 12 — 1909
மறைவு: 04 — 02 — 1991

திதி: அபரபக்க ஷஷ்டி

வரணியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், அல்வாய் வடக்கு ஆதி சிவ வீரபத்திர சுவாமி தேவஸ்தானத்தில் 55 ஆண்டுகளாக பூஜை புரிந்தவருமான

சிவஸ்ரீ இ. சிவசாமிக் குருக்கள்

அவர்களின்

2ஆவது சிராத்த தினம்

நாளை 13 - 01 - 1993 புதன்கிழமை
அன்னாரின் இல்லத்தில் நடைபெறும்.

- குடும்பத்தினர்.

அல்வாய் வடக்கு,
அல்வாய்.

([illegible])



திருநெல்வேலி
சைவ வித்தியா விருத்திச் சங்கம்

பயன்தரும் மரக்கன்றுகள்
மலிவு விற்பனை

மேற்படி சங்கத்தில் பயன்தரும் மரக்கன்றுகளான மா, பலா, கமுகு, தோடை, தேசி, நெல்லி, பப்பாசி, கொடித் தோடை, கொடித்தேசி போன்ற இன்னோரன்ன பல மரக்கன்றுகள் மிகவும் மலிவு விலையில் விற்கப்படுகின்றன.

உடன் தொடர்பு கொள்ளுங்கள்:

ப. கணேசலிங்கம்,
பதில் முகாமையாளர்.

திருநெல்வேலி,
11 01-1993

(சி-4141)



உ

அகில இலங்கைக் கம்பன் கழகம்
வழங்கும்

மகர யாழ் விருது

எமது கழகம் வருடந்தோறும் நடத்தும் கம்பன் விழாவில் இவ்வாண்டு முதல், தேர்ந்தெடுக்கப்படும் ஒருவருக்கு மேற்படி மகர யாழ் விருதினை வழங்கிக் கௌரவிக்கவுள்ளது.

இவ்விருதுக்குத் தெரிவு செய்யப்படுபவருக்கு ரூபா பதினையாயிரம் (15 000 -) கொண்ட பணமுடிச்சும், தங்கப் பதக்கமும் வெள்ளியினாலான மகர யாழ் விருதும் முதல்நாள் கம்பன் விழாவில் வழங்கப்படும்.

தாம் சார்ந்த துறையினூடு தியாக உணர்ச்சியோடும், இனப்பற்றோடும், மனிதாபிமானத்தோடும் இம்மண்ணுக்காய்த் தொண்டாற்றி, எமது இளைய தலைமுறைக்கு முன்னுதாரணமாய் வாழ்ந்து கொண்டிருக்கும் ஒருவரையே இவ் விருதுக்காகத் தேர்ந்தெடுப்பதென எமது கழகம் முடிவு செய்துள்ளது.

இத்தகைய சான்றோரின் பெயர் - விவரங்களைப் பொது மக்களும், சமூக நிறுவனங்களும் சிபார்சு செய்து கீழ்க்கண்ட எமது முகவரிக்கு எதிர்வரும் 1993 — 02 — 15க்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு வேண்டிக் கொள்கின்றோம்.

விருது பற்றிய இறுதியான முடிவு கழக அறிஞர் குழுவினால் தீர்மானிக்கப்படும்.

சிபார்சுகள் அனுப்பப்படும் கடித உறையின் இடது பக்க மேற்புறத்தில், "மகர யாழ் விருதுக்கான சிபார்சு - 1993" எனக் குறிப்பிடவும்.

"கம்பன் புகழ்பாடிக் கன்னித்தமிழ் வளர்ப்போம்".

தி. திருநந்தகுமார், தலைவர்.
க. குமாரதாசன், செயலர்.

அகில இலங்கைக் கம்பன் கழகம்,
"கம்பன் கோட்டம்"
300, கோயில் வீதி, நல்லூர்,
யாழ்ப்பாணம்.

(சி-4140)



அங்லோ ஏசியன் பேர்ட்டிலைசேர்ஸ்
கம்பனி வழங்கும்......

"சுமிசிடின் சுப்பர்"
SUMICIDIN SUPER

வெங்காயம், கத்தரி, கோவா,
உருளைக்கிழங்கு, போஞ்சி
போன்ற பயிர்களைத் தாக்கும்
தாள் கோதிப்புழு, தண்டு துளைப்பான்,
கோவா மயிர்கொட்டிப் புழு, டயமன் முதுகு வண்டு
மற்றும்
பூச்சிகளையும் திறம்பட கட்டுப்படுத்துகின்றது.

பீடை நாசனிகள் விற்பனையாளரிடம் பெற்றுக்கொள்ளலாம்

(சி-2866)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ் சிறு விளம்பரம்

### இறைச்சிக் கோழிகள்

இறைச்சிக் கோழிகள் பெற்றுக்கொள்ளலாம். நல்லூர் வீடியோ சென்ரர், இல 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (24028

### ENGLISH

Spoken with Grammar and Literature கிழமையில் இரண்டு நாட்கள் (ஆரம்பத்திலிருந்து), (இலக்கிய வரலாறு உட்பட) பேசப் பழக்கப் படுகின்றது. V. S. Kanda samy, A. I. B. Part I (London, Inter (London) இல 87, திருநெல்வேலி றோட் (பாலத்திற்கு அண்மையில்), கொக்குவில். (24029)

### ஆசிரியர் தேவை

உடுவிலில் வசிக்கும் மாணவிக்கு Spoken English கற்பிக்க ஆசிரியர் தேவை. இல. 479, மே/பா உதயன், யாழ்ப்பாணம். (24031)

### புனரமைப்பு

மந்திகை, ஜன. 12

வரணி வடக்கு "துவரையன்" குளம் ஆழமாகத் தோண்டப்பட்டு புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளது.

வரணி வடக்கு "செல்வா" சனசமூக நிலையத்தின் அனுசரணையுடன் அப் பகுதி மக்களால் இப் புனரமைப்பு வேலை மேற்கொள்ளப்பட்டது. (த ரி)

---

**PURE/APP.**

**Mr. குணசிங்கம்**
B. Sc (Hons.)

**PAPER CLASS**
Tues., Thurs.
4-15 – 6-15 p.m.
ஆரம்பம்:
12 – 01 – 1993
4-15 p. m.

**PERSONAL NEW SCIENCE CENTRE**
Hilakam Front Lane,
JAFFNA.
(சி-4137)

---

**Postgraduate Diploma in English and Diploma in English 1991/92**

## ADMISSION TEST

The Admission Test for the above courses will be held on 1993-01-16 at 9-00 a. m in the Ramanathan Hall, University of Jaffna. (Not on 1993-01-15 as scheduled) The list of names of selected students for the Admission Test is displayed in the University Notice Board.

Please obtain the admission card from the Examination Branch, University of Jaffna.

– REGISTRAR
University of Jaffna.
1993-01-11
(C-4138)

---

## விக்னா கல்வி நிறுவனம்

52, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.

**பிரிவு - II ஆண்டு 6,7,8,9,10**

ஆரம்பமாகிவிட்டன.

- ★ பிரிவு II இல் இன்னும் குறிப்பிட்ட அனுமதிகளே வழங்கப்படும்.
- ★ கணிதம், விஞ்ஞானப் பாடங்கள் வாரத்தில் நான்கு நாட்களும் நடைபெறும்.
- ★ மாதாந்தப் பரீட்சை நடத்தப்படும்.

(சி-4133)

---

## A/L புதிய பிரிவுகள்

A/L 92 பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுக்கான மீட்டல் வகுப்புகள்

செவ்வாய், வியாழன்

| | |
|---|---|
| PHYSICS | — திரு. சுந்தரலிங்கம் |
| CHEMISTRY | — திரு. சிவசோதி |
| ZOOLOGY | — திரு. அல்போன்ஸ் |
| PURE MATHS | |
| APPLIED MATHS | — திரு. கண்ணன் |

★ நேர அட்டவணையை பதிவாளரிடம் பெற்றுக் கொள்ளவும்.

ஆரம்பம்: 12 - 01 - 93

**BOND INSTITUTES**
யாழ்ப்பாணம்.
[கி/4129]

---

## ஓராண்டு நினைவஞ்சலி



மண்ணில்:
10
05
1928

விண்ணில்:
25
12
1992

திருமதி
## செல்வராசு வேலாயுதம்

திதி: 12 – 01 – 1993

எங்கள் அன்புத் தெய்வமே! எங்களையெல்லாம் ஆளாக்கிய அருமை அம்மாவே!

அன்பின் ஒளிவிளக்காய், பாசத்தின் பிறப்பிடமாய், எமது குடும்பத்தின் குலவிளக்காய், எமக்கெல்லாம் வழி காட்டியாய் வாழ்ந்த நீங்கள் எப்படியம்மை எம்மை விட்டுப் பிரிந்தீர்கள். எங்கள் நெஞ்சப் பிசைவு இரத்தமாகக் கசிகிறது. அந்த நாளை நினைக்க மனம் இன்னும் ஒப்பவில்லையே! நீங்கள் எம்மை விட்டுப் பிரிந்து ஓராயிரம் ஆண்டானாலும் எங்கள் ஒவ்வொரு மூச்சும் அம்மா, அம்மா என்றே ஒலித்துக் கொண்டிருக்கும். காலனும், காலமும் எம்மிடமிருந்து உங்களைப் பிரித்தாலும் எம் இதயங்களில் நீங்கள் நிலையாக இருப்பீர்கள். நீங்கள் காட்டிய வழியில் ஜோதியாய் எம்முடன் எப்போதும் இருப்பீர்கள் என்ற நம்பிக்கையில் வாழுகின்றோம்.

உங்கள் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கிறோம்.

நித்தமும் உங்கள் பிரிவால் தவிக்கும்;
அன்புக் கணவர், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
சகோதரர்கள், உறவினர்கள்.

பயிற்றோலை,
அச்சுவேலி தெற்கு,
அச்சுவேலி.
(5703)

---

வெளிவந்துவிட்டது!
## அறிவுக் களஞ்சியம் - 7
(சி-4168)

---

## விக்னா கல்வி நிறுவனம்

52, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.

## O/L

பிரிவு II DAY CLASSES (8-00 — 2-00)
பிரிவு III EVENING CLASS (3-15 — 6-00)
பிரிவு II SAT., SUN. CLASSES (8-00 — 3-00)

**பிரிவு II ஆண்டு 6, 7, 8, 9, 10**

புதிய பிரிவுகள் ஆரம்பம்:
16 - 01 - 1993 (சனிக்கிழமை)

| | |
|---|---|
| விஞ்ஞானம் | — திரு. J. R. சூரி |
| கணிதம் | — திரு. ஜெகன் |
| ஆங்கிலம் | — திரு. விஸ்வநாதன் |
| சமூகக்கல்வி | — திரு. கோபி |
| தமிழ் | — திரு. சிவா |
| சமயம் | — திரு. கெங்கா |
| வர்த்தகம் | — திரு. கருணாகரன் |

(சி-4131)

---

## Computer Programming in BASIC Language

**4 MONTHS**

திங்கள், புதன் வகுப்புகள்

ஆரம்பம்: **18 - 01 - 1993**
10-30 மணி

**Lectures By: S P. SIVAPATHASUNDARAM**
M.I.D.P.M. (Lond.)

- ★ கட்டணம் தவணை முறையில்
- ★ இலவச அச்சடித்த பாடக் குறிப்புகள்
- ★ கூடிய செய்முறைப் பயிற்சி
- ★ பயிற்சி முடிவில் பெறுமதி வாய்ந்த சான்றிதழ்.

1, 2, 3 (All Stages), LOTUS 1-2-3, SHORT-HAND & TYPING நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

**SCHOOL OF BUSINESS ADMINISTRATION**
(Pioneers in Computer Education)
16 3rd CROSS STREET, JAFFNA.
(சி-4139)

---

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

### அமரர் சின்னப்பு பொன்னுத்துரை

தோற்றம்: 22–05–1924
மறைவு: 13–12–1992

கடந்த 13-12-1992 அன்று கொழும்பில் காலமான திரு. சி. பொன்னுத்துரை அவர்களின் மறைவு கேட்டு, எமது இல்லத்திற்கு வந்து ஆறுதல் கூறியோருக்கும் அன்னார் சுகயீனமுற்ற காலத்தில் பல்வேறு வழிகளில் உதவியோருக்கும் கொழும்பில் அன்னாரின் கிரியையில் பங்கு பற்றியோருக்கும் நன்றி கூறுகின்றோம்.

இன்று (12-01-1993) செவ்வாய்க்கிழமை அன்னாரின் ஆத்மா சாந்தியை வேண்டி, எமது இல்லத்தில் நடைபெறும் நிகழ்ச்சிகளிலும் தொடர்ந்து மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறும் உற்றார், உறவினர், நண்பர்களையும் வேண்டி நிற்கின்றோம்.

மருமகன் – சிவராசா (இராசு),
மகள் – இன்பம்.

கரன் வீதி,
தாவளை – இயற்றாலை,
கொடிகாமம்.
(23965)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### பயன்தரு சந்திப்பு

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் வந்துள்ள அங்கிலிக்கன் திருச்சபையின் ஆயர் அதி. வண. கென்னத் பெர்னாண்டோ உட்பட மூன்று ஆயர்கள் தமிழீழத் தேசியத் தலைவர் திரு. வே. பிரபாகரனைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தி உள்ளனர்.

அங்கிலிக்கன் திருச்சபையின் ஆயர் அதி வண. கென்னத் பெர்னாண்டோ ஒரு தென்னிலங்கையர். எனினும் தமிழ் மக்கள் தமது போக்குவரத்தில் அனுபவிக்கும் கஷ்டங்களை நேரில் கண்டறிய வேண்டும், சொந்தத்தில் அனுபவித்துப் பார்க்க வேண்டும் என்ற அக்கறையுடன் கிளாலிப் பாதை ஊடாக குடாநாட்டுக்கு வந்தவர். கிளாலிப் படுகொலைச் சூடு தணியுமுன் துணிகரமாகக் கடலேரியைத் தாண்டிப் பயணம் செய்தவர்.

இங்கு வந்து நின்ற மூன்று தினங்களில், அரசாங்கத்தின் இராணுவ நடவடிக்கைகள் காரணமாகவும், பொருளாதாரத் தடை காரணமாகவும் தமிழ் மக்கள் படும் சகல கஷ்டங்களையும், அவலங்களையும் கொழும்பு ஆயர் அறிந்திருப்பார். தமிழ் மக்களின் மனோநிலையையும் புரிந்திருப்பார்.

அதனால், சிறப்பாக அவரும் பொதுவாக யாழ். ஆயர்களும் தலைவர் பிரபாகரனைச் சந்தித்துப் பேசியது முக்கியத்துவம் வாய்ந்ததும் பயனுள்ளதுமாகும்.

வடக்கு - கிழக்கு யுத்தம் தொடங்கிய பின்னர் தெற்கிலிருந்து வந்த எத்தனையோ பிரமுகர்களில் தலைவர் பிரபாகரனைச் சந்தித்த பெருமை கொழும்பு ஆயருக்கே உரியது.

"சில சிந்தனைகளை என் தலையினுள் கொண்டு வந்துள்ளேன். இங்கு அவற்றை உரியவர்களுடன் பேசவுள்ளேன்" — என்று கொழும்பு ஆயர் உதயனுக்கு அளித்த விசேட செவ்வியில் தெரிவித்திருந்தார். ஆகையால் அவர் நிச்சயம் தலைவர் பிரபாகரனுடன் தமது சிந்தனைகளைப் பகிர்ந்திருப்பார்.

இந்தச் சந்திப்புத் தென்னிலங்கையர் எழுப்பும் முக்கிய கேள்வி ஒன்றுக்கும் பதிலளிப்பதாக உள்ளது. கொழும்பிலிருந்து வரும் பிரமுகர்களை தலைவர் பிரபாகரன் ஏன் சந்திப்பதில்லை; பேச்சு நடத்துவதில்லை என்று அவர்கள் கேட்டு வந்த வினாவுக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டு விட்டது.

தமிழர்களின் கஷ்டங்களை உணர்ந்தவர்களை, அவர்களின் இன்னல்களைத் தீர்ப்பதில் உண்மையான அக்கறை உடையவர்களை, அதர்மம் நிரம்பி வழியும் அரசாங்கத்துக்கு அஞ்சாதவர்களை, அமைதியையும் சமாதானத்தையும் வெறும் பேச்சுக்காகவன்றி உண்மையாகவே விரும்பும் அதேவேளை தமிழர்களின் உரிமைகளை வழங்க வேண்டும் என்று வாதாடுபவர்களை, தமிழர்களின் உரிமைகளை, அபிலாஷைகளை, அங்கீகரிப்பவர்களை சந்திப்பதற்குத் தாம் தயார் என்று தலைவர் பிரபாகரன் சிங்கள மக்களுக்கு எடுத்துக் காட்டியுள்ளார்.

இனப் பிரசினையைத் தீர்ப்பதற்கு, யுத்தத்தை நிறுத்துவதற்கு அரசாங்கம் தனது தீர்வை முன்வைக்கவேண்டும் என்ற தமது செய்தியையும் தலைவர் பிரபாகரன் தக்கபடி தெரிவித்திருக்கிறார்.

கொழும்பு ஆயர் அவர்கள், தலைவர் பிரபாகரனைச் சந்தித்துப் பேசியமை தெற்கில் ஒரு நல்ல பிரதிபலனை விளைவிக்க வேண்டும் என்பதே தமிழர்களின் விருப்பம்.

தமிழர்கள் சமாதானத்தையும் அமைதியையும் விரும்புகிறார்கள். ஆனால் அதற்காக தங்கள் உரிமைகளை விலை பேசத் தயாரில்லை என்பதையும் கொழும்பு ஆயர் — தலைவர் பிரபா சந்திப்பு சிங்கள மக்களுக்கு எடுத்துக்கூறும்.

# யாழ். மக்களுக்கு தேவையான உணவில் இருபது சத வீதமே அனுப்பப்படுகிறது

## போக்குவரத்துத் தடையால் விலைகள் ஐந்து மடங்கு! அகதிகள் 4 லட்சம்; தொழில் இழந்தோர் 2 லட்சம்!!

**வெகுசன அமைப்புக்களின் ஒன்றியம் யாழ். நகரில் நேற்று நடத்திய பிரமாண்டமான ஆர்ப்பாட்டப் பேரணியின்போது ஜனாதிபதி பிரேமதாசாவுக்கு அனுப்புவதற்கு யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபரிடம் கையளிக்கப்பட்ட மகஜர் இங்கு முழுமையாகப் பிரசுரிக்கப்படுகிறது.**

யாழ்ப்பாண மாவட்ட மக்களைப் பிரதிநிதிப்படுத்தும் பல்வேறு வெகுசன அமைப்புக்கள், தொண்டர் ஸ்தாபனங்கள், அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள் தொழிற்சங்கங்கள், ஏனைய சனசமூக அமைப்புக்கள் ஆகியவற்றை பிரதிநிதித்துவப்படுத்தும் வெகுசன அமைப்புக்களின் பிரதிநிதிகளாகிய நாம் வடபகுதி மக்கள் படும் பெரும் அவலங்களையும், துயரங்களையும் தங்களின் மேலான கவனத்திற்கு சமர்ப்பிக்கிறோம்.

தமிழ்ப் பிரதேசங்களில் தமிழ் மக்களுக்கெதிராக அர்த்தமற்ற மிகப்பெரிய அளவிலான யுத்தத்தை நடாத்திக் கொண்டிருக்கிறீர்கள் இவ்வாறாக அவசியமற்ற போரினால் தமிழ் மக்கள் நாளாந்தம் மிகப் பெரிய நெருக்கடிகளை சந்தித்துக் கொண்டிருக்கிறார்கள்.

கடந்த முப்பத்திரண்டு மாத காலமாக தமிழ் மக்களுக்கு எதிராகப் பொருளாதாரத் தடை விதிக்கப்பட்டுள்ளது. சொந்த மக்களுக்கெதிராக இவ்வாறான பொருளாதாரத் தடையை விதிப்பது மனிதாபிமானமற்ற கொடூரமான செயலாகும்.

32 மாதமாக யாழ். உணவுத் திணைக்களத்திற்கு எவ்வித உணவுப் பொருள்களும் அனுப்பி வைக்கப்படவில்லை, யாழ். கூட்டுறவு மொத்த விற்பனவு நிலையம் விமானக் குண்டு வீச்சினால் சேதமாக்கப்பட்டுள்ளது. இங்கும் 32 மாத காலமாக உணவுப் பொருள்கள் வைக்கப்படவில்லை. இதனால் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் உணவுப் பொருள்களைப் பெறமுடியாமல் கஷ்டப்படுகின்றன.

இந்நேரத்தில் அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகத்தினால் யாழ். செயலகப் புனர்வாழ்வுப் பகுதிக்கு அனுப்பி வைக்கப்படும் சிறு அளவிலான உணவுப் பொருள்களே அனுப்பப்படுகின்றன. அவை யாழ் மாவட்ட மக்களின் உணவுத் தேவையில் 20 சத வீதத்தைக் கூட பூர்த்தி செய்யக்கூடியதாக இருக்கவில்லை.

யாழ் மாவட்ட மக்களிற்கு சராசரி வருடமொன்றுக்கு பின்வரும் அளவிலான உணவுப் பொருள்கள் தேவையென யாழ். அரசாங்க அதிபர் தெரிவித்துள்ளார்.

| | | |
|---|---|---|
| அரிசி | 82,500 | மெற். தொன் |
| மாவு | 29,700 | " " |
| சீனி | 18,150 | " " |
| தானிய வகைகள் | 12,375 | " " |

### விலை உயர்வு 500 சத வீதம்

தற்போது யாழ். மாவட்டத்தில் உணவுக் கையிருப்பு முழுமையாக முடிந்து விட்டது. கொழும்பில் இருந்து அத்தியாவசிய உணவுப் பொருள்களைக் கொண்டு வருவதற்கான பொருளாதாரத்தடை மற்றும் கடல், தரை மார்க்கமான போக்குவரத்து துண்டிக்கப்பட்டு, தடை செய்யப்பட்டு இருப்பதால் பிற மாவட்டங்களில் இருந்து கூட்டுறவுச் சங்கங்கள், தனியார் வர்த்தகர்கள் ஊடாக மூலம் உணவுப் பொருள்களை கொண்டுவர முடியாத துர்ப்பாக்கிய நிலை என்பன உருவாகியுள்ளன.

பொருள்களின் விலை 50% முதல் 500% வரை அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. இதனால் பாதிப்புக் குள்ளாகியிருக்கும் மக்கள் மேலும் பாதிப்புக்குள்ளாகி பட்டினிச்சாவை எதிர்நோக்க வேண்டி ஏற்படும்.

இராணுவ நடவடிக்கை இராணுவ ஆக்கிரமிப்பு. கண்மூடித்தனமான முப்படைகளின் தாக்குதல் காரணமாக தொழிற்சாலைகள், தொழில் வழங்கு நிலையங்கள் அழிக்கப்பட்டுள்ளன. அல்லது மூடப்பட்டுள்ளன இதனால் சுமார் இரண்டு இலட்சத்து ஆயிரம் பேர் அறவே தொழில் வாய்ப்பினை இழந்துள்ளனர். சுமார் இரண்டு லட்சத்து பத்தாயிரம் பேர் அன்றாடம் கூலி வேலை செய்த தொழில் வாய்ப்பினை இழந்து எவ்வித வருமானமும் இன்றி நிர்க்கதியாகியுள்ளனர் இவர்களால் எப்படி அதிக விலை கொடுத்து பொருள்களை வாங்க முடியும்?

உதாரணமாக சில பொருள்களின் விலை வித்தியாசங்களை தருகின்றோம்

| பொருள்கள் | கொழும்பு விலை | யாழ் மாவட்ட விலை |
|---|---|---|
| நாட்டரிசி | ரூ. 18-00 | ரூ 46 00 |
| வெள்ளைப்பச்சை அரிசி | ரூ 15-50 | ரூ 34-00 |
| மாவு | ரூ. 11-50 | ரூ. 26 00 |
| மண்ணெண்ணெய் | ரூ 10-00 | ரூ 210-00 |
| தேங்காய் எண்ணெய் | ரூ. 45-00 | ரூ 165 00 |
| பருப்பு | ரூ. 55 00 | ரூ 110-00 |
| தீப்பெட்டி | ரூ 1-00 | ரூ 6-00 |

### போக்குவரத்துத் தளம்

பொருளாதாரத் தடையை நீக்கி எமது மக்களின் உணவுத் தேவையைப் பூர்த்தி செய்யக் கூடியளவு தாராளமாக அத்தியாவசிய உணவுப் பொருள்களை அனுப்பி வைத்துப் பட்டினிச் சாவிலிருந்து எமது மக்களைக் காப்பாற்றுமாறு வேண்டுகிறோம்.

யாழ்ப்பாணக் குடா நாட்டு மக்களின் ஒரேயொரு தரை மார்க்கமான போக்குவரத்துப் பாதை ஆனையிறவு ஆகும் இப்பாதை 1990 யூன் மாதம் 10 ஆம் திகதியுத்தம் தொடங்கியவுடன் மூடப்பட்டு விட்டது. இதனால் எமது மக்களுக்கு ஏற்பட்ட இழப்புக்கள் பயங்கரமானவையாகும். அதன் பின்னர் பூநகரி, கெம்படி, ஊரியான், கிளாலி கடல் நீரேறி ஊடாகப் பிரயாணம் செய்யவேண்டி ஏற்பட்டது

போக்குவரத்துக் கஷ்டம் காரணமாக ஒரு தனி மனிதன் எவ்வளவு பாதிப்புக்கு உள்ளாவான் என்பது தாங்கள் அறிந்த ஒன்றே முப்படைகளின் அட்டூழியங்கள் அடாவடித்தனங்களுக்கு மத்தியில் வேறு வழியின்றியே கடல் நீரேரி ஊடாகப் பிரயாணம் செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டது.

### பூநகரிப் பாதையை திறக்குக

02-01-93 அன்று கிளாலிக் கடற் பரப்பில் பிரயாணம் செய்தது அப்பாவிப் பொது மக்கள் என அறிந்திருந்தும், கடற்படையினர் வெறியாட்டம் ஆடி சுட்டும், வெட்டியும் ஐம்பதிற்கும் மேற்பட்டவர்களை படுகொலை செய்துள்ளனர். இது அடிப்படை மனித உரிமைகளை மீறும் செயலாகும்

ஆதலால் பூநகரிப் பகுதியில் அமைந்துள்ள இராணுவ முகாமை அகற்றி எமது மக்கள் சுதந்திரமாக பிரயாணம் செய்ய பூநகரி - சங்குப்பிட்டி கடல் மார்க்கமான பாதையை போக்குவரத்திற்காகத் திறந்துவிட்டு பாதிப்புக்குள்ளான எமது மக்களின் துன்பங்களை நீக்குமாறு வேண்டுகின்றோம்.

இன்று யாழ். குடாவில் இராணுவ நடவடிக்கை என்ற போர்வையில் நாளாந்தம் முப்படைகளின் அட்டூழியங்கள் அதிகரித்துள்ளன. மக்கள் செறிந்து வாழ்கின்ற குடியிருப்புக்களை நோக்கி எறிகணைத் தாக்குதல்கள், குண்டு வீச்சு விமானங்களில் இருந்து குண்டுகளைப் போடுதல், கடற்படையினர் பீரங்கித் தாக்குதல்கள் என்பன தொடர்கின்றன.

### 4 லட்சம் பேர் அகதிகள்

இராணுவ அட்டூழியங்கள், இராணுவ ஆக்கிரமிப்பு காரணமாக எண்பத்தியிரண்டு ஆயிரம் குடும்பங்களைச் சேர்ந்த நான்கு இலட்சத்துக்கு மேற்பட்ட மக்கள் இடம்பெயர்ந்து அகதியாகியுள்ளனர். இவர்களுக்குத் தேவையான கல்வி, சுகாதாரம் வதிவிடம், தொழில்வாய்ப்புக்கள் எதுவும் ஏற்படுத்திக் கொடுக்காத நிலையில் மனோநிலை பாதிக்கப்பட்டு விரக்தி அடைந்துள்ளனர். இவர்கள் மனிதாபிமான ரீதியில் கவனிக்கப்பட வேண்டியவர்கள் என்பது கருத்தில் எடுக்கப்பட வேண்டியதொன்றாகும்.

உயர் நாகரிகமுள்ள மனித சமுதாயத்தின் முன்னால், சொந்த நாட்டு மக்களுக்கு எதிராக இப்படியான கொடூரமான இராணுவ அனர்த்தங்களையும், ஆட்சியாளர்கள் அடக்கு முறைகளையும் கட்டவிழ்த்து விடுவது மனிதாபிமானமற்ற மிகமிக அநாகரிகமான செயலாகும். பல்வேறு பாதிப்புக்குள்ளாகியிருக்கும் மக்கள் தற்போது அமைதி, சமாதானம் என்பனவற்றை வேண்டி நிற்கின்றனர்.

### கல்வி பாதிப்பு

பாடசாலை மாணவர்களுக்குத் தேவையான உபகரணங்கள், வசதிகள் எதுவும் செய்து கொடுக்கப்படாததால் கல்வி நிலை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. தென் இலங்கையில் நவீன கம்யூட்டர் முறையிலான தொலைக்காட்சிக் கல்வி புகுத்தப்பட்டுள்ளது. ஆனால் இங்கு குறைந்தளவிலான உபகரணங்கள் கூடக் கிடைக்கவில்லை. யாழ் பல்கலைக்கழக கல்வி மேம்பாட்டுக்காக வெளிநாட்டு உதவிவழங்கும் நிறுவனங்கள் கொடுத்த உபகரணங்களை எடுத்து வருவதற்கு கூட்டுப்படைத் தலைமை அலுவலகம் மறுத்து விட்டது. இதன் மூலம் எமது மாணவர்களின் கல்வி திட்டமிட்டுப் பாழடிக்கப்படுகிறது.

### போசாக்கின்மை

மருத்துவ வசதி இன்மையாலும், போசாக்கின்மையாலும் சிறுவர்கள், கர்ப்பிணித் தாய்மார்களின் உயிர் இழப்புக்கள் அதிகரித்து வருகின்றன

உணவு உற்பத்திக்குத் தேவையான உபகரணங்கள், [illegible] முப்படைகளின் தாக்குதலினால் வீடுகளை இழந்தார்கள். இடம் பெயர்ந்தவர்கள் தங்கள் வீட்டை செப்பனிட்டு குடியிருக்க கட்டிடப் பொருள்கள் இல்லாது மிகவும் கஷ்டம் அடைகின்றனர். ஆதலால் உணவு, உறைவிடம், கல்வி, சுகாதார மருத்துவம் ஆகியவற்றுக்குத் தேவையான பொருள்களையும் உபகரணங்களையும் எவ்வித தட்டுப்பாடுமின்றி அனுப்பி வைத்து கல்வி அற்று, நோயுற்று, வீடற்று இருக்கும் மக்களுக்கு நிவாரணம் வழங்குவது தங்களின் பெரும் கடமையாகும்.

### கோரிக்கைகள்

எனவே மாண்புமிகு ஜனாதிபதி அவர்களை பின்வரும் ஐந்து கோரிக்கைகளை நிறைவேற்றி வைக்குமாறு பணிவுடன் வேண்டுகிறோம்

★ தமிழ் மக்கள் மீது திணிக்கப்பட்டிருக்கும் இராணுவ அழுத்தங்களையும், பொருளாதாரத் தடைகளையும் நீக்கி, அத்தியாவசிய உணவுப் பொருள்களை அனுப்பி வைத்து ஏனைய பிற மாவட்டங்களில் விற்பனை செய்யப்படும் விலைக்கே கிடைக்கச் செய்யவேண்டும்.

★ யாழ் குடா மக்கள் தங்கள் அத்தியாவசிய தேவைகளைப் பூர்த்தி செய்யும் பொருட்டு பிற மாவட்டங்களுக்குச் செல்வதற்கான சகல கடல், தரை மார்க்கமான போக்குவரத்துப் பாதைகளும் துண்டிக்கப்பட்டுள்ளன ஆதலால் பூநகரிப் பகுதியில் அமைந்துள்ள இராணுவ முகாம்களை நீக்கி மனிதாபிமான ரீதியில் கடல் மார்க்கமான பூநகரி - சங்குப்பிட்டிப் பாதையை போக்குவரத்திற்காக திறந்து விட வேண்டும்.

★ தமிழ் மக்களுக்கெதிரான பாரிய இராணுவ அழுத்தங்களையும், கருத்தற்ற யுத்தத்தையும் உடனடியாக நிறுத்தி தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடாத்த வேண்டும்.

★ சாதாரண ஒரு தனி மனிதனுக்கு கிடைக்க வேண்டிய அடிப்படை வசதிகளான உணவு, உறைவிடம், கல்வி சுகாதார மருத்துவம் போன்ற அத்தியாவசிய தேவைகளுக்கான பொருள்களை எவ்வித கட்டுப்பாடுமில்லாமல் அனுப்பி வைக்க வேண்டும்.

★ அப்பாவிப் பொது மக்களை சுட்டும், வெட்டியும், குண்டு வீசியும் படுகொலை செய்யும் இராணுவ அட்டூழியங்களை நிறுத்த வேண்டும். ★

# ஆயர் குழுவினர் நேற்று ஆஸ்பத்திரிக்கு விஜயம்

யாழ்ப்பாணம், ஜன. 12

யாழ்ப்பாணம் வந்திருக்கும் அங்கிலிக்கன் திருச்சபையின் ஆயர் வண. கென்னத் பெர்னாண்டோ நேற்று மாலை யாழ். ஆஸ்பத்திரிக்குச் சென்று அங்கு நிலைமைகளை நேரில் அவதானித்தார்.

ஆஸ்பத்திரியில் உள்ள பல இடங்களையும் வார்ட்டுகளையும் பார்வையிட்ட அவர் நோயாளிகளையும் சந்தித்து உரையாடினார்

ஆயருடன் கிழக்காசிய தேசிய கிறிஸ்தவ மன்றச் செயலாளரான ரியான்ஸி பெரேராவும் ஆஸ்பத்திரிக்கு விஜயம் செய்தார்.

ஆஸ்பத்திரியின் மீது ஸ்ரீலங்கா விமானப் படை நடத்திய குண்டு வீச்சுத் தாக்குதலில சேதமுற்றிருந்த டாக்டர்கள் விடுதியைப் பார்த்ததும் ஆயர் "என் கடவுளே!" (Oh! My God!) என வாய் விட்டுக் கூறினார்.

"இப்படியும் நடந்ததா? உண்மையை நேரில் பார்க்கும் போதுதான் அதன் ஆழம் புரிகிறது" — என்று அருகிலிருந்தவர்களிடம் அவர் கூறினார்.

ஆஸ்பத்திரி அதிகாரிகளுடன் உரையாடிய ஆயர், யாழ். ஆஸ்பத்திரியில் நிலவும் மருந்துத் தட்டுப்பாடு மற்றும் பிரச்சினைகளை கரிசனையுடன் கேட்டறிந்தார்.

(உ-15)

# ஓய்வூதியர்களுக்கு 300 ரூபா அலவன்ஸ் ஜனவரி முதல்

கொழும்பு, ஜன 12

ஓய்வூதியர்களுக்கு 300 ரூபா அலவன்ஸ் வழங்கப்படுவதற்கான ஏற்பாடுகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.

இம்மாதத்தில் இருந்து இந்த அலவன்ஸ் கிடைக்கும்.

1992 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் திகதி அன்று அல்லது அதற்கு முன்னர் ஓய்வுபெற்றவர்களுக்கும் இந்த அலவன்ஸை வழங்கும்படி பணிப்புரை விடுக்கப்பட்டிருக்கிறது.

1993 ஜனவரி மாத ஓய்வூதியப் பணத்துடன் இந்தத் தொகையும் வழங்கப்படும்

கடந்த டிசம்பர் 24 இல் வெளியிடப்பட்ட பொது நிர்வாக — 37/92 ஆம் இலக்க — சுற்றறிக்கைக்கு அமைய இப் பணிப்புரைகள் வழங்கப்பட்டுள்ளன. (உ-எ)

# வ.பி.போ.ச ஊழியருக்கு 4 மாதச் சம்பளம்

யாழ்ப்பாணம், ஜன. 12

வடபிராந்திய போக்குவரத்துச் சபை ஊழியர்களுக்கான நான்கு மாதச் சம்பளத்தை பொதுமுகாமையாளர் திரு. பி. சி. ஜெயசிங்கம் கொழும்பில் இருந்து எடுத்துவந்துள்ளார்

பொங்கலுக்கு முன் ஊழியர்களுக்கு சம்பளம் வழங்க வேண்டும் என்பதற்காக கொழும்பில் இருந்து பெரும் சிரமங்களுக்கு மத்தியிலும் தாம் சம்பளத்தை எடுத்து வந்ததாக திரு. ஜயசிங்கம் தெரிவித்தார்.

ஊழியர்களுக்கான போனஸ் கொடுப்பனவையும் அவர் எடுத்து வந்துள்ளார். வங்கிக் கட்டளையாக எடுத்து வரப்பட்ட சம்பளம், வங்கியில் மாற்றப்பட்டதும் ஊழியர்களுக்குரிய கொடுப்பனவுகள் வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது (உ-ஒ)

# 9 நாட்களின் பின் சடலம் அடக்கம்

கடந்த 2 ஆம் திகதி கிளாலிக் கடலில் கடற்படையினர் நடத்திய கொடூரத் தாக்குதலில் உயிரிழந்த ஆண் ஒருவரின் சடலம் ஒன்பது நாட்களின் பின்னர் நேற்று அரச செலவில் அடக்கம் செய்யப்பட்டது.

கரை ஒதுங்கிய இச்சடலம் அடையாளம் காணப்படுவதற்காக யாழ். ஆஸ்பத்திரிச் சவச்சாலையில் கடந்த ஐந்து நாட்களாக வைக்கப்பட்டிருந்தது.

அடையாளம் காணப்படாத நிலையில் அச்சடலம் நேற்று அரச செலவில் அடக்கம் செய்யப்பட்டது.

(உ-15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நகரில் ஆர்ப்பாட்ட...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
னர்.

நேற்றுக் காலையிலிருந்தே பேரணியில் கலந்து கொள்வதற்காக நல்லூர் கந்தசுவாமி கோவிலில் மக்கள் அணி அணியாகத் திரண்டனர். பேரணி சுமார் 10.45 மணியளவில் ஆரம்பமானது பேரணியில் இந்து, கிறிஸ்தவ மதகுருமார்களும் உற்சாகத்துடன் கலந்து கொண்டனர்.

பேரணியின் முன்னே, எரிபொருள் தட்டுப்பாட்டை பிரதிபலிக்கும் விதத்தில் மினிபஸ் ஒன்றை மாடுகள் இழுத்துச் சென்றன. மோட்டார் சைக்கிள்களை சைக்கிளில் சென்றோர் இழுத்துச் சென்றனர்.

பேரணியில் சென்றவர்கள் உணர்ச்சி பொங்கப் பலவித கோஷங்கள் எழுப்பினர்; சுலோகங்கள் பதாகைகளையும் தாங்கிச் சென்றனர்.

பேரணி கோவில் வீதி ஊடாகச் சென்றது. வழியில் செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக்குழுவின் பிரதிநிதியிடம் மகஜரின் பிரதி கையளிக்கப்பட்டது. ஐ நாவுக்கு விலாசமிடப்பட்ட பிரதியை அவர் ஏற்க மறுத்துவிட்டார். அதனைத் தாம் பொறுப்பேற்க முடியாது என்றும் அவர் தெரிவித்தார்.

கொளுத்தும் வெயிலையும் பொருட்படுத்தாது மக்கள் பேரணி நீண்டு சென்றது. நண்பகல் 1.30 மணியளவில் பேரணி செயலகத்தை அடைந்தது. பேரணியில் கலந்து கொண்டவர்கள் செயலகத்தை அடைந்ததும் மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர். ஜனாதிபதிக்கு அனுப்பப்படும் மகஜர் ஒலிபெருக்கியில் வாசிக்கப்பட்டு மேலதிக அரசாங்க அதிபர் திருமதி பத்தினியம்மா திலகநாயகம் போலிடம் கையளிக்கப்பட்டது.

தமிழீழ வெகுஜன அமைப்புகள் ஒன்றியத் தலைவர் திரு. கு. சிறிலிடம் இருந்து மகஜரைப் பெற்றுக்கொண்ட மேலதிக அரச அதிபர், அதனை ஜனாதிபதியிடம் விரைந்து சேர்ப்பிக்க ஏற்பாடு செய்வதாகக் கூறினார். இறுதியில் தர்மம்தான் வெல்லும் என்றும் அவர் சொன்னார். அதன் பின்னர் ஆர்ப்பாட்டப் பேரணியில் கலந்து கொண்டோர் கலைந்து சென்றனர்.

(அ-5-162-17-111-15-5')

## இருபொலிஸாரை...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]
(40 வயது - கேகாலை) ஆகிய இருவரும் நேற்று விடுவிக்கப்பட்டனர்.

பண்டார ஒரு பிள்ளையின் தந்தை என்றும் பெரேரா 5 பிள்ளைகளின் தந்தை என்றும் தெரிவிக்கப்பட்டது

இருவரையும் பொறுப்பேற்ற ஆயர், தாம் 13 ஆம் திகதி கொழும்பு திரும்பும் போது அவர்களைத் தம்முடன் அழைத்துச் சென்று பொலீஸ் மா அதிபர், அல்லது பிரதிப் பொலீஸ் மா அதிபரிடம் ஒப்படைப்பதாகத் தெரிவித்தார்.

விடுதலைப் புலிகளால் தடுத்து வைக்கப்பட்டுள்ள ஏனைய பொலீஸாரையும் ஆயர் சந்தித்துப் பேசினார் அவர்கள் தமது உறவினர்களுக்கு எழுதிய கடிதங்களையும் ஆயர் பெற்றுக்கொண்டார். (உ-3)

## ஷெல் தாக்கு

பலாலி இராணுவ முகாமில் இருந்து நேற்று முன்தினம் இரவு அச்சுவேலி, வளலாய், பகுதிகளை நோக்கி ஷெல் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

ஏற்கனவே மக்கள் வெளியேறியிருந்த பகுதிகளில் இந்த ஷெல்கள் விழுந்து வெடித்ததால் உயிர்ச் சேதம் ஏதும் ஏற்படவில்லை. சில வீடுகள் மாத்திரம் சேதமடைந்துள்ளன. (உ-15)

## கைதிகள்....

(1 ஆம்பக்கத் தொடர்ச்சி)
அந்த நிகழ்ச்சியிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார் அங்கு அவர் மேலும் கூறியதாவது:-

தலைவர் பிரபாகரனின் நல்லெண்ண அடிப்படையில் இருவரையும் விடுதலை செய்கிறோம்.

விடுதலைப் புலிகள் யுத்தத்தை மட்டும் விரும்புபவர்கள் அல்லர். சமாதானத்தையும் விரும்புகிறவர்கள்.

ஸ்ரீலங்கா சிறை, தடை முகாம்களில் ஆயிரத்துக்கு மேற்பட்ட எமது ஆதரவாளர்கள் எந்த வசதிகளும் இன்றி தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

ஆனால் எம்மால் தடுத்து வைக்கப்பட்டுள்ள சிறைக் கைதிகளுக்கு சகல வசதிகளும் வழங்குகின்றோம். அவர்களின் வசதிகள் குறித்து செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு அதிகாரிகள் அடிக்கடி நேரடியாக வந்து பார்த்து ஆராய்கிறார்கள்.

ஸ்ரீலங்கா சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள எமது ஆதரவாளர்களை விடுதலை செய்தால், எம்மால் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களை நாமும் விடுதலை செய்யத் தயார் என்று செஞ்சிலுவைச் சங்கசர்வதேசக்குழுஅதிகாரிகள் மூலமும், யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்த புத்த பிக்குகள் மூலமும ஸ்ரீலங்கா அரசுக்கு செய்தி அனுப்பினோம்.

ஆனால் அரசு அதனை நடைமுறைப்படுத்த தயாராக இல்லை. — என்றார். (உ-3)

## பிரபாவினுடனான...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
விக்க முடியுமா என அவரிடம் கேட்டேன்.

''எதுவித தயக்கமும் இன்றி காருண்ய மனத்துடன் அவர் அதற்குச் சம்மதம் தெரிவித்தார் தலைவர் பிரபாகரனுடைய இந்தக் காருண்யச் செயலை ஒரு பெரிய சம்பவமாக நான் கருதுகின்றேன். அவருடைய இந்தச் செயலுக்கு நான் என்றும் மதிப்பும், நன்றியும் உடையவனாக இருப்பேன்.''

''இரண்டு தரப்பினருமே இத்தகைய நல்லெண்ணச் செயல்களைப் பரஸ்பரம் செய்து கொள்வதன் மூலம் முன்னேற்றங்களைக் காணலாம் என நான் நினைக்கிறேன்.''

''திரு. பிரபாகரனை சந்தித்த போது அவருக்கு சமாதானத்தில் பெரும் நாட்டம் இருப்பதை அவரது பேச்சில் இருந்து அறிந்து கொண்டேன். விடுதலைப் புலிகள் பேச்சுவார்த்தை— சமாதானம் ஆகியவற்றின் மூலம் தீர்வு காண்பதிலும் ஆர்வம் கொண்டிருப்பதையும் என்னால் உணர முடிந்தது''—இவ்வாறு ஆயர் மேலும் சொன்னார். (உ-5-3)

## புலிகள்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
யில் —

விரைவில் சமாதானச் சூழ்நிலை ஒன்று உருவாகுவதற்காகப் பிரார்த்தனை செய்யுமாறு தெற்கில் உள்ள மக்களிடம் கூறுவேன். அத்துடன் சமயத்தலைவர்களிடம் சமாதான சூழ்நிலைக்கான முயற்சிகளை மேற்கொள்ளுமாறு வலியுறுத்துவேன் — என்றார். (உ-3)

# படையின் மனவலுவை கூட்டவே தலைமையகம் இடம்மாற்றம்

யாழ்ப்பாணம், ஜன 12

வடக்கு, கிழக்கில் யுத்தம் புரிந்து வரும் படையினரின் மனவலிமையைக் கூட்டவே கூட்டுப்படைத் தலைமையகத்தை கொழும்பிலிருந்து அநுராதபுரத்துக்கு மாற்ற முடிவு செய்யப்பட்டது.

இவ்வாறு செய்தி ஏஜென்ஸிகள் தகவல் வெளியிட்டன.

கூட்டுப்படைத் தலைமையக இடமாற்றம் குறித்து முன்னாள் விமானப்படைத் தளபதியும் பாதுகாப்புத் துறைப் பத்திரிகையாளருமான ஏயர் வைஸ் மார்ஷல் ஹரி குணதிலகவிடம் பி. பி. ஸி. கருத்துக் கேட்டபோது அவர் கூறியதாவது:-

தலைநகர் கொழும்பிலிருந்து சுமார் நூறு மைல்களுக்கு அப்பால் — யுத்த முனைக்கு கிட்டவாக— கூட்டுப்படைத் தலைமையகம் இடம்மாற்றம் செய்யப்படுகின்றது.

ஆனால் அதனால், அதிகம் பயன் ஏதும் கிடைக்கும் என நான் நம்பவில்லை.

தலைமையகம் கொழும்பிலிருந்தால் என்ன? அநுராதபுரத்தில் இருந்தால் என்ன? அதனால் மாற்றம் ஏதும் வந்துவிடப் போவதில்லை.

வேண்டுமானால் படையினரின் மனவலுவைக்கூட்ட இது உதவக்கூடும் தம்மை வழிநடத்தும் கமாண்டர்கள் தங்களுக்கு மிக நெருக்கமாகவே உள்ளனர் என்ற மனவலிமை படையினருக்கு இதனால் கிடைக்கும்.

பதினெட்டு மாதங்களுக்கு முன்னரும் இதேபோன்ற திட்டம் ஒன்று இருந்தது

போரை வழிநடத்திச் செல்லும் பொறுப்பு முப்படைத்தளபதிகள் வசம் இருந்தபோது உத்தரவு பிறப்பிக்கும் கட்டளைப்பீடத்தை அநுராதபுரத்தில் இயக்குவது என அவர்கள் தீர்மானித்திருந்தனர்.

ஆனால் அவர்களின் அதிகாரம் பறிக்கப்பட்டு அது கூட்டுப்படை தலைமையகத்திடம் ஒப்படைக்கப்பட்டதை அடுத்து அத்திட்டம் அப்போது கைவிடப்பட்டது— என்று தெரிவித்தார்.

தற்போது அநுராதபுரத்தில் தமது அலுவலகத்தை வைத்துச் செயற்படும் வட பிராந்தியத் தளபதி, இனி மேல் அதனை வவுனியாவுக்கு இடமாற்றுவார் என்றும் — அவர் தமது அலுவகத்தை இடம்மாற்றியதும் கூட்டுப் படைத் தலைமையகம் அநுராதபுரத்துக்கு இடம்மாற்றப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

மற்றொரு செய்தி 2 ஆம் பக்கத்தில்)

(உ-3-6)

## கிளாலி..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
விடப்பட்டிருந்த ஆயிரக்கணக்கான பயணிகளில் ஒரு பகுதியினரே நேற்று யாழ்ப்பாணத்தை வந்தடைந்தனர்.

எஞ்சியோரில் மற்றொரு தொகுதியினர் இன்று வந்து சேருவர் என எதிர்பார்க்கப்படுகிறது. (உ-5-111)

## அம்பாறைத்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி
பற்றப்பட்டன.

மோதல் தொடங்கியதை அடுத்து பெரியபுல்லுமலை, கல்வெட்டி ஆகிய முகாம்களில் இருந்து கூடுதல் படையினர் கவச வாகனங்கள் சகிதம் சண்டை நடைபெற்ற இடத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டதாகவும்—

பீரங்கி பொருத்தப்பட்ட விமானங்களின் உதவியுடன் விடுதலைப் புலிகள் மீது படையினர் தாக்குதல் நடத்தினர் என்றும் கூட்டுப்படைகள் தலைமையகம் அறிவித்தது.

மேற்படி திடீர் மோதல் சம்பவத்தில் வீரச்சாவடைந்த பன்னிரு போராளிகளின் விவரம் வருமாறு;-

o மேஜர் தவமோகன் அல்லது சதீஸ் (தம்பிமுத்து தவராசா - வாழைச்சேனை)

o கப்டன் இராஜேந்திரன் அல்லது சேது (சீனித்தம்பி விஜயரட்ணம் - பெரிய நீலாவணை, கல்முனை)

o இரண்டாம் லெப்டினன்ட் குணதாஸ் (சதாசிவம் ஜெயக்குமார் - தன்னாமுனை)

o இரண்டாம் லெப்டினன்ட் சேரபாண்டியன் அல்லது சிவானந்தன் (வீரசிங்கம் இரட்ணசிங்கம் - வந்தாறுமூலை)

o வீரவேங்கை அனுராதன் அல்லது அலோஸியஸ் (சிவகுரு சிவகுமார் - கல்லடி உப்போடை)

o வீரவேங்கை குருபரன் அல்லது கௌதம் (ஞானப்பிரகாசம் அந்தோனி - ஐயங்கேணி, ஏறாவூர்)

o வீரவேங்கை ஜெயந்தன் (கனகசிங்கம் தங்கவடிவேல், சித்தாண்டி)

o வீரவேங்கை தில்லேஸ்வரன் (சதாசிவம் யோகராசா -மயிலவெட்டுவான், ஆயித்தியமலை)

o வீரவேங்கை சூசரூபன் (தர்மதாஸ் ஜீவகரன்-கிரான்)

o வீரவேங்கை உலகநாதன் (சீனித்தம்பி கிருஷ்ணமூர்த்தி -ஐந்தாம் குறிச்சி, ஏறாவூர்)

o வீரவேங்கை ஈழவேந்தன் அல்லது தயான் (கோபால கிருஷ்ணன் திருஞானசம்பந்தமூர்த்தி - தம்பிலுவில்)

o வீரவேங்கை மோகன் (தேவநாயகம் - ரவிச்சந்திரன் தேவபுரம், முறக்கொட்டாஞ்சேனை) (உ-5)

## தலைமையக இடமாற்றம்

# பாதுகாப்பு அதிகாரிகளை காப்பாற்று[ம்] திட்டம்!

கொழும்பு, ஜன. 12

பாதுகாப்புத்துறை உயரதிகாரிகள் விடுதலைப் புலிகளின் தாக்குதலுக்கு இலக்காவதைத் தவிர்க்கச் செய்வதும் கூட்டுப்படைத் தலைமையகம் இடமாற்றும் திட்டத்துக்கு ஒரு காரணமாக இருக்கலாம் எனக் கருதப்படுகிறது.

பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ரஞ்சன் விஜேரத்ன, கடற்படைத் தளபதி கிளான்ஸி பெர்னாண்டோ ஆகியோர் கொல்லப்பட்ட சம்பவங்களும் —

கூட்டுப்படைத் தலைமையகம் மீதான குண்டுத் தாக்குதலும் —

தலைநகர் கொழும்பில் பாதுகாப்புத்துறை உயர் அதிகாரிகளின்! பாதுகாப்பை கேள்விக்குரியதாக்கியிருப்பதாகச் சுட்டிக்காட்டப்படுகிறது.

கொழும்பில் பெரும் எண்ணிக்கையான தமிழர்கள் வசிப்பதால் அவர்களிடையே ஊடுருவியிருக்கும் விடுதலைப் புலிகளைக் கண்டுபிடிப்பதோ அல்லது அவர்களால் பாதுகாப்பு உயர் அதிகாரிகளுக்கு ஏற்படக் கூடிய ஆபத்தைத் தடுப்பதோ இயலாத காரியம் எனச் சுட்டிக்ககாட்டப்படுகிறது.

ஆனால் அநுராதபுரத்தில் நிலைமை வேறு. அங்கு வசிக்கும் தமிழர்களின் எண்ணிக்கை மிகக் குறைவு. அவர்களிடையே புதியவர்கள் ஊடுருவினாலும் அவர்களை இலகுவில் கண்டுபிடித்துவிடலாம்.

கூட்டுப்படைத் தலைமையகத்தில் பாதுகாப்புத்துறை உயரதிகாரிகள் பலர் ஒன்றுகூடுவதால் அவர்களுக்கு ஒன்றாக ஏற்படக்கூடிய ஆபத்தைத் தவிர்ப்பதற்காக, தலைமையகத்தை அநுராதபுரத்துக்கு மாற்றுவது சிறந்தது என அரசுக்கு ஆலோசனை கூறப்பட்டிருக்கலாம் என்றும் தெரிவிக்கப்பட்டது. (உ-3)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி நாகமுத்து சுப்பிரமணியம்

(முருகன் கோயிலடி நயினாதீவு)

நயினாதீவைச் சேர்ந்த திருமதி நாகமுத்து சுப்பிரமணியம் 11-01-93 திங்கள் அதிகாலை இறைவனடி சேர்ந்தார். அன்னார் காலம் சென்ற சுப்பிரமணியம் அவர்களின் அன்பு மனைவியும், காலம்சென்ற தவராசசிங்கம், திருமதி பா அருந்தவநாயகி, [ஓய்வு பெற்றவர்-உள்நாட்டிறைவரித் திணைக்களம்), சுந்தரேஸ்வரன், இளமுருகையன் ஆகியோரின் தாயாரும், பாலசுப்பிரமணியம், ரமணி, ஆகியோரின் மாமியும், சர்மிலி, பானுசா ஆகியோரின் பேர்த்தியும், காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை, கதிரேசு ஆகியோரின் சகோதரியுமாவார்.

ஈமக்கிரியைகள் இன்று 2-01-93 செவ்வாய்க்கிழமை காலை 10-00 மணியளவில் நீற்றா இல்லம் இல:179, டலாலி வீதி, கோண்டாவில் இல்லத்தில் நடைபெற்று, புதவுடல் தகனக்கிரியைக்காக கோண்டாவில் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும், உற்றார், உறவினர், நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
திருமதி பா. அருந்தவநாயகி
(மகள்)

(2 032)

### திருமதி நந்தீசன் பாமினி

யாழ்ப்பாணம் கொய்யாத்தோட்டத்தை பிறப்பிடமாகக் கொண்டவரும், இந்தியாவில் வசித்து வந்தவருமான திருமதி நந்தீசன் பாமினி சென்னையில் காலமானார்.

இவர் திரு. சி. நந்தீசனின் அன்பு மனைவியும், Dr. ந. மூத்ததம்பி — காலஞ்சென்ற மகாதேவி ஆகியோரின் அன்பு மகளும், மூ. ஸ்ரீகாந்தா (சுவிஸ்), காலஞ்சென்ற மூ. மகேந்திரராசா, திருமதி க. இரத்தினசிங்கம், மூ நவராசா (சுவிஸ்), திருமதி கு. கிருஸ்ணதிருராஜா (கனடா), ஆகியோரது அன்புச் சகோதரியும், சி. இரத்தினசிங்கம் (உணவுத் திணைக்களம், யாழ்ப்பாணம்), திருமதி தி. ஸ்ரீகாந்தா, தி. கிருஸ்ணதிருராஜா கனடா, திருமதி ச. மகேந்திரராசா ஆகியோரது மைத்துனியுமாவார்.

அன்னாரது ஈமக்கிரியைகள் சென்னையில் நடைபெற்றன.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

தகவல்:
Dr ந மூத்ததம்பி

9/1 'A' புதிய வீதி,
கொய்யாத்தோட்டம்,
யாழ்ப்பாணம்.

(24037)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு: 16 — 08 — 1907



உதிர்வு: 13 — 1[illegible] — 1992

அமரர்
**அம்பலவாணர்**
**செல்லப்பா செல்லத்துரை**

(பிரபல புகையிலை வியாபாரி - சுருட்டுத் தொழிற்சாலை முதலாளி, முன்னாள் உரிமையாளர், முருகன் ஸ்ரோர்ஸ், புத்தளம்)

அன்புடனும், பாசத்துடனும் எங்களை எல்லாம் சிறப்புடன் வாழ வழிகாட்டிய எங்கள் அன்புத் தெய்வமே!

உங்கள் ஆத்ம சாந்திக்காக இறைவனை என்றும் பிரார்த்திப்போம்:

அன்பு மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

செல்வநாயகம் வீதி,
கோண்டாவில் கிழக்கு.

(24035)

இப் பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 12-01-1993 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org